மில்க்வைற் செய்தி
Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஐப்பசி 1985 ★ இதழ் 118



# நவராத்திரி நாயகி வழிபாடு

தமிழ் நாகரிகத்தில் விழாக்கள், விரதங்கள், பண்டிகைகள், நற்கருமங்கள் மிகப்பலவாகும். எல்லாம் நன்மைக்கே, எந்நாளும் நன்நாள் எனக்கண்டவர்களும் தமிழரே. வேத மந்திரங்கள் ஒருபால் ஒலிப்ப, ஒலித்தவர்களுக்கு உறைவிடங்கள் அமைந்த சதுர்வேதி மங்கலம் முதலிய குடியிருப்புகளைக் கொடுத்துதவியவர் தமிழ் மன்னர்கள். சற்கருமங்களாய நற்கருமங்களுக்கு வேண்டிய சரியை, கிரியை முதலியவற்றைக் கூறும் ஆகமங்களின் அடிப்படையில் வாழ்ந்தவர்கள் தமிழர்.

(தொடர்ச்சி 16ம் - பக்கம்)



சண்டிலிப்பாய் ஊரில் பாலர் பாடசாலையில் தொழிலதிபர் உபகரிப்பு.

★ செய்யும் உதவிக்கு பயன் கருதலாகாது ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசு நாயனார்

திருப்பாசூர் — திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

விண்ணாகி நிலனாகி விசும்பு மாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்பு கின்ற
எண்ணாகி எழுத்தாகி இயல்பு மாகி
ஏழுலகுந் தொழுதேத்திக் காண நின்ற
கண்ணாகி மணியாகிக் காட்சி யாகிக்
காதலித்தங் கடியார்கள் பரவ நின்ற
பண்ணாகி இன்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே:

ஆகாயம் முதல் மண்ணீருகவுள்ள பூதங்களாகி, மேகமாகி மழைபொழிந்து கடலாகி உலகத்தைச்சூழ்ந்து உலகத்தவர் விரும்புகின்ற எண் எழுத்து இரண்டுமாகி, ஏழுலகத்தவரும் வணங்கிச் சேவித்துக் கண்டுகொள்ள நின்ற கண்ணாகி, கண்ணின் மணியாகி, காணும் காட்சி யாகி விருப்பத்தோடு அன்பரடியார்கள் தொழுதுபாடும் பண்ணாகி, பாடலின் பொருளாகி, பண்பும் பயனுமாகி இன்னமுதாய்த் திருப்பாசூர் திருத்தலத்தில் எழுந்தருளி யுள்ள ஒளிமயமான கடவுளைக் கண்டு அடியேன்உய்ந்தமை நன்றாயிற்று.

## பஞ்சாட்சரத்திலும் ஐந்து

| | | |
|---|---|---|
| ஸ்தூல பஞ்சாக்கரம் | — | நமசிவய |
| சூக்கும பஞ்சாக்கரம் | — | சிவயநம |
| காரண பஞ்சாக்கரம் | — | சிவயசிவ |
| மகாகாரண பஞ்சாக்கரம் | — | சிவ |
| மகாமனு பஞ்சாக்கரம் | — | சி |




## இடனறிதல்

தன்செயல்களுக்கு ஏற்ற இடத்தை அறிந்துகொள்ளுதல்

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்னல் லது.

பகைவரை வளைத்துச் சூழ்வதற்கு ஏற்ற இடத்தைக் கண்டபின்னன்றி அவருக்கு எதிரிடையாக யாதொருசெயலையும் தொடக்கக்கூடாது. அவரைச் சிறியரென்று இகழவும் கூடாது.


**Knowing the right place**

Until You find a place (of vantage) never begin an action nor show disdain (of your foe).

## 1985 ஒக்டோபர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | செவ்வாய் | — | அன்னிபெசண்ட் அம்மையார் தினம் |
| 2 | புதன் | — | மகாத்மா காந்தியடிகள் பிறந்தநாள்<br>லால்பகதூர் சாஸ்திரிகள் பிறந்த நாள் |
| 3 | வியாழன் | — | கார்த்திகை விரதம் |
| 4 | வெள்ளி | — | சுப்பிரமணியசிவா பிறந்தநாள் |
| 6 | ஞாயிறு | — | மாலை 6-04 அட்டமி |
| 7 | திங்கள் | — | அட்டமி நவமி |
| 8 | செவ்வாய் | — | நவமி இரவு 6-55 வரை |
| 10 | வியாழன் | — | ஏகாதசி விரதம்<br>ஆயிலியம் |
| 11 | வெள்ளி | — | பிரதோஷ விரதம் |
| 13 | ஞாயிறு | — | அமாவாசை விரதம்<br>மஹாளய பக்ஷ முடிவு |
| 14 | திங்கள் | — | நவராத்திரி ஆரம்பம் |
| 17 | வியாழன் | — | தமிழ் ஐப்பசி |
| 20 | ஞாயிறு | — | இரவு 8-01 அட்டமி |
| 21 | திங்கள் | — | அட்டமி நவமி |
| 22 | செவ்வாய் | — | சரஸ்வதி பூசை<br>கேதாரகௌரி விரதாரம்பம் |
| 23 | புதன் | — | விஜயதசமி |
| 24 | வியாழன் | — | ஏகாதசி விரதம்<br>சோழப் பேரரசன் இராசராசன் சதயநாள் விழா |
| 26 | சனி | — | பிரதோஷ விரதம் |
| 28 | திங்கள் | — | பூரணை விரதம்<br>திருமூலநாயனார் குருபூசை |
| 30 | புதன் | — | கார்த்திகை விரதம் |
| 31 | வியாழன் | — | பண்டாரவன்னியன் நினைவு |

★ படிப்பின் அளவுக்கு அறிவு உயரும் ★



# பெருநகரின் பெரும் பேராசிரியர்கள்



கணவனும் மனைவியும் தம்பதிகளாகவே தமிழ்ப் பேராசிரியர்களாகித் தில்லிமாநகரில் தமிழோசை பரப்பித் தாயகம் திரும்பியுள்ளார்கள். அவர்கள் யாரோவெனின் சாலையும் சாலினியுமான தமிழர். சாலி ஒரு மீன், வானத்தில் பெருஞ்சிறப்புடையது; சாலையும் சாலினியும் தமிழ்பேசுமுலகத்துக்கப்பாலும் சிறப்புடையவர்கள். முன்னர் ஒரு இளந்திரையன் பெரும்பெயர் பெற்றவன். இன்றைய இளந்திரையன் தமிழ்வளர்த்தவன், அறிவுவளம் பொதுமைநலம்பெற வேண்டுமென்னும் குறிக்கோள்கொண்டவன். திரு. வி. க. தொடங்கிய வழியில் தொடர்ந்து நடப்பவன். அவளுந்தான் தமிழ்க்கொடி; கொடியும் கொழுகொம்பும் சேர்ந்து தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழ் அரும்பிப் போதாகி மலர வழிசெய்து, தாமே தம்விருப்ப ஓய்வுபெற்றுத் தாயகம் திரும்பிப் பெருந்தொண்டு செய்யப்போகிறார்கள்: அது பெருமளவில் ஆராய்ச்சியாயும் அமையும். பைந்தமிழின் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலான கோபாலன், பெயரால் நிலவும் புரம் சென்னை 86ல் உள்ளது. அங்கேயுள்ள திருவிதியான் தெருவிலமைந்த பேரவை இல்லம் இவர்களின் பணிமனை.

தில்லியில் ஆசிரியராய், விரிவுரையாளராய், பேராசிரியராய் மலர்ந்த இவர்களின் தமிழ்மணம் தில்லிப் பல்கலைக் கழகத்தில் கமழ்கின்றது. முன்னர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிரகத்தன் என்னும் வடபுலத்தான் ஒருவன் கபிலர் என்னும் சங்கப் புலவரிடம் தமிழும் தமிழியலும் படித்துப் புலமைபெற்றாங்கு இன்று வடபுலத்தார் பலர் இவர்களிடம் தமிழ்த்துறையை வளம்படுத்தியுள்ளார்கள். தில்லியிலேயே தமிழுக்கு நாற்றுமேடை தயாரித்த தமிழ்ச் சொல்லேர் உழவர்கள் இத் தம்பதிகளாவர்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையே இல்லாதிருந்த நிலைமையை மாற்றி, இன்று தென்திசையின் பெருமையெல்லாம் அங்கே சென்று குவியும்வண்ணம் செய்தவர் சாலையார். அங்கே தமிழ்ப்பட்டம், பட்டத்தின் மேற்பட்டம், கலாநிதிப்பட்டம், யாவும் பெற வசதிசெய்து வழியமைத்தவர் சாலையார். சாலையார் எழுதிய நூல்களும், பாடிய பாடல்களும் தமிழ் கூறுநுலகெங்கும் பழக்கமானவை; தமிழுக்குச் சாலையமைத்தவை.

நாங்கள் ஐவர் வடக்கே சென்று இமயம்வரை சுற்றிவந்து, தில்லியில் இளைப்பாறியிருந்தமையை தமிழ் மூக்கால் மோந்தறிந்து எங்கள் இருப்பிடத்துக்கு வந்து, எம்மை அழைத்துச்சென்று பெரியதொரு உணவுச்சாலையில் இசையொலிப்ப இராச் சாப்பாட்டுக்கு ஒழுங்கு செய்தார் சாலையார். சாலையாருடன் நூல்க சேவையார் சுப்பிரமணியம் அவர்களும் கூடவே உணவு இனித்தது; இனிமையை மேலும் சுவைபடச் செய்தவர் அப்பொழுது லண்டனிலிருந்து பறந்து வந்து குதித்த எங்கள் அளவெட்டியூரான் கிருஷ்ணபிள்ளை ஞானசூரியன். அன்று தில்லியில் உணவுச்சாலை தமிழ்ச்சங்கத்தின் வைகல் நடைபெற்ற இடமாயிற்று.

தில்லியில் தமிழ்ப்பணி புரிந்த சாலையார் தமிழ் நாட்டவர்க்கு உறுதுணையாய் இருந்தவர். இவர் இனித் தமது தமிழக மனையிலிருந்து தேமதுரத் தமிழோசை திக்கெல்லாம் பரவச் சேவை செய்வாராக. சாலினியார் பொன்னைப் பொருளைக் கேளாமல் புத்தகங்களாய புதல்வர்களை ஈன்று புறந்தருவாளாக.

## அன்பே சிவமயம் சத்தியமே பரமசிவம்

சத்தியமேவ ஜெயதே என்னும் உபநிடத வாக்கியத்தை, அதாவது உண்மை ஒன்றுதான் வெல்லும் அதுவே வெற்றியின் வளர்ச்சி என்று கொடிகட்டிய நாடு இந்தியா. இந்தவகையில் மலர்ந்த கொள்கை நால்வர் வாயினாலும், யோகர் வாயினாலும் தென்கிழக்கு நாடுகளில் ஒன்றாய மலேசியாவில் ஒளிவீசுகின்றது. அங்குள்ள சைவசித்தாந்த மன்றம் செலங்கூரிலமைந்த வண்ணம் பெரும்பணியாற்றுகிறது. இதன் கிளைகள் பலபிரதேசங்களிலும் பரந்துள்ளன. அங்கெல்லாம் மில்க்வைற் வெளியீடுகள் வெகுவாகப் பரவுதல்வேண்டுமென்று விண்ணப்பிக்கிறார்கள். விரைவில் வெளியீடுகள் விநியோகமாகும்.

நாயன்மார் வரலாறு, விரத அநுட்டானங்கள், திருமுறைகள், சைவசமய நித்திய விதிமுறைகள், சைவசமய விழாக்களை நடாத்தும் நெறி முதலியன சம்பந்தமான நூல்கள் வேண்டுமாம்.

★ நல்லாரோடு இணங்குதல் நன்மைக்கு வித்து ★

# சக்தியைப் போற்றுவோம்

பாரத் என்னும் இந்தியநாடு வடக்குத் தெற்காக, கிழக்குமேற்காக மிகப்பெரிய நாடு. அதன் மாநிலங்கள் பல மொழிபேசும் மக்கட்கூட்டத்தால் நிறைந்தவை. மக்கள் பல மொழிகளைப் பேசினாலும் அவர்களுடைய சிந்தனை ஒன்றே ஒன்றுதான். அது இந்திய சிந்தனை. (Great minds agree.)

பாரதநாட்டுப் பண்பாட்டுப் பண்டிகைகளுள் சக்தி வழிபாடும் ஒன்று. சக்தி இறைவனின் திருவருள். அருளது சக்தியாகும் என்பது சித்தாந்தம். சித்தாந்தம் என்பது திருமுறைகளின் சாரம்.

இறைவன் ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்காக ஐந்தொழில் செய்தருளும்போது அயன், அரி, அரன், மகேசன், சதாசிவன் என எழுந்தருளும்போது; இறைவி முறையே கலைமகள், திருமகள், உமையவள், மகேஸ்வரி, மனோன்மணி என எழுந்தருளுவள். எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள் என்பது சித்தாந்தம்.

சக்தியை முற்காலத்தவர் கொற்றவை எனக் கண்டனர். போரில் வெற்றிபெறுவதற்காகக் கொற்றவை வழிபாடு அக்காலத்தில் நிலவியது. வலிமை, ஆற்றல், உழைப்பு, உறுதி, உடற்சுகம் கருதிய மக்கள் கொற்றவையை துர்க்கை, வடவாயிற் கிழத்தி, வீரமாகாளி முதலாய மூர்த்தங்களில் வணங்கினர். அவள் சிங்க வாகனத்தில் எழுந்தருள்பவள். மங்களவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம் முதலிய நாள்களில் அவளை வணங்கியவர்கள் ஆண்டுதோறும் நவராத்திரி நாள்களில் சிறப்பு வழிபாடாற்றினர்.

துர்க்கையின் புகழ் யசுர் வேதத்தில் துர்க்காசூக்தம் என்னும் பகுதியில் நிறையவுள்ளது. இன்னும் துர்க்கா சப்தசதி என்னும் மந்திரத்தொகுதியும் அவள் புகழ்பாடுகிறது. ஓம் சத்யை நம; ஓம் துர்க்காயை நம; எமக்குப் பாதுகாப்பளிப்பவை.

உலகம் தோன்றுவதற்கும், இயங்குவதற்கும், அழிவதற்கும் சக்திதான் காரணம். பழையகாலத்துத் தமிழர் அவர்களுள்ளும் பாலைநிலவாசிகள் கன்னிப் பெண்ணுக்குக் கொற்றவையின் கோலம் புனைந்து எள்ளுருண்டை, அவரைப் புழுக்கல், சோறு, சுண்ணம், சந்தனம் ஏந்தி; பலவிதமான பறைகள், ஊது குழல்கள் சப்திப்ப வணங்கினர்.

தேவி வழிபாட்டை மிகப்பழைய நாயனாரும் முனிவரும் சித்தருமாய திருமூலர் தமது திருமந்திரத்தின் பல்வேறிடங்களில் பரவிப் பாடியுள்ளார். பின்வந்த இளங்கோவடிகள், சாத்தனார் முதலான புலவர்களும் போற்றியுள்ளார்கள்.

"சங்கமும் சக்கரமும் தாமரைக்கை யேந்தி
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்தவே நிற்பாய்."

வலிமைக்கும் கருணைக்கும் வழிபடும் தெய்வமாய தேவி கலைகளுக்கும் அதி தெய்வம். "சிந்தாதேவி, செழுங்கலை நியமத்து நந்தா விளக்கே, நாமிசைப்பாவாய், வானோர் தலைவி, மண்ணோர் முதல்வி" எனப்பாடும் போது புறச்சமய நெறி நின்றவர்களும் தமிழ்ப் பண்பாட்டை மறக்கவில்லை என்பது போதரும்.


"பராசக்தி பலதிறப்படுவது" என்பது உபநிடதம் "ஆதியோடந்தம் இல்லாத பராபரம் போதமதாப் புணரும் பராபரை. தீதற்று அகம் வந்த சிவன் சக்தி, நாதமுடிவிலே நல்லாள் இருப்பது" என்று போற்றும் திருமூலர்; சக்தியை "திரிபுரை, சுந்தரி, அந்தரி, சிந்துரப் பரிபுரை, நாரணியாம் பலவண்ணத்தி" என்றெல்லாம் நவந்தருபேதநாயகியாகப் பாடுவர். அவள் தன்னுருத் தானான மூவுருத் தன்மையள். அவளின் வண்ணம் பொன்னிறம், செம்மை நிறம், வெண்மைநிறம் என்பர்.

அவளை அறியா அமரரும் இல்லை, அவளின்றிச் செய்யும் அருந்தவம் இல்லை. அவளின்றி ஐவரால் ஆவதொன்றில்லை. அவள் இறைவி, பராசக்தி, அண்டமோடு எண்டிசை தாங்கும் அருட்செல்வி. அவள் உபாயம் அளிக்கும் ஒருத்தி, அபாயம் அறக் கெடுக்கும் அன்புத்தாய். கன்னியழியாத்தாய். சிந்தையின் உள்ளே திரியும் சிவசக்தி; அவள் புவனபதியம்மை. ஆற்றலுள் நிற்கும் அருந்தவப் பெண்பிள்ளை. இறைவனுக்குத் தாயும், தாரமும், மகளுமானவள். அவள் சாதகப் பெண்பிள்ளை, முத்திக்கு நாயகி. அண்டம் முதலாக அவனிபரியந்தம் எங்கும் வியாபித்த கனங்குழை. ஆதியும் அந்தமுமாய் நிற்கும் அவளைத் தியானிப்பவர் நமசிவ எனக் கருதியிருப்பர்.

## தமிழில் வழங்கும் வடசொற்கள் சில

| | | |
|---|---|---|
| வாகனம் | ... | ஊர்தி |
| வாகீஸ்வரி | ... | நாமகள் |
| வாக்கியம் | ... | சொற்றொடர் |
| வாக்கு | ... | சொல் |
| வாக்குமூலம் | ... | உறுதிச்சொல் |
| வாக்குவல்லவம் | ... | சொல்வன்மை |
| வாக்குவாதம் | ... | சொற்போர் |
| வாசகம் | ... | சொல் |
| வாசனை | ... | மணம் |
| வாசித்தல் | ... | கற்றல் |
| வாஞ்சை | ... | விருப்பம் |
| வாதம் | ... | வழக்கு |
| வாதனை | ... | துன்பம் |
| வாதி | ... | வழக்காளி |
| வாத்தியம் | ... | இசைக்கருவி |
| வானரம் | ... | குரங்கு |
| வாந்தி | ... | கக்கல் |
| வாமம் | ... | இடப்பாகம் |
| வாயு | ... | காற்று |
| வாரணம் | ... | யானை |
| வாரிதி | ... | கடல் |
| வார்த்தை | ... | சொல் |
| வாலிபம் | ... | இளமை |

★ பசிப்பிணி தீர்த்தவனே பெரிய மருத்துவன் ★



## பஞ்ச தந்திரம்

நூறு உள்ளவன் ஆயிரத்தையும், ஆயிரம் உள்ளவன் லட்சத்தையும், லட்சம் உள்ளவன் கோடியையும், கோடி உள்ளவன் இராச்சியத்தையும், இராச்சியத்திலிருந்து சுவர்க்கத்தையும் விரும்புகின்றனர்.

வயது வந்தால் மயிர் உதிர்கிறது. பற்களும் வயதானால் விழுகின்றன. காது அடைக்கிறது, கண்பார்வை மங்குகிறது, ஆனால் பேராசை மாத்திரம் முதுமை அடைவதில்லை.

ஆபத்திலுள்ள நண்பனைவிட்டு அகல நடப்பவன் நிச்சயமாக நரகத்தை அடைவான்.

அறிவுள்ள புருஷன் என்றும் கலந்து ஆலோசிப்பவனாகவே இருத்தல் வேண்டும்.

வயிறு நிரம்பாவிட்டால் வெட்கம், நட்பு, சங்கீதம், புத்தி, அழகு, பிரயாண சங்கடம், துக்கம், கேளிக்கை, தர்மம், சாஸ்திரம், அறிவு, சுத்தம், ஆசாரம் இவற்றை ஒருவன் கவனிப்பதில்லை,

நன்கு பார்க்காமலும், நன்கு அறியாமலும், நன்கு செய்யாமலும், நன்கு சோதிக்காமலும் எதனையும் செய்தலாகாது.

## ஆஸ்தான கவிகள்

ஆஸ்தான வித்துவான்கள், அரசசபைப் புலவர்கள் என்ற வரிசைகளில், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தியார், காளிதாசர், முதலானவர் பெயர்களை நாமறிவோம். சுதந்திர இந்தியாவில் தமிழ்நாட்டில், நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை கண்ணதாசன் முதலானோர் காலத்துக்குக் காலம் ஆஸ்தானப் புலவர்களாய் இருந்தார்கள்.

இலக்கிய காலம், பொற்காலம், மறுமலர்ச்சிக் காலம் என்றெல்லாம் புகழ்பூக்க மலர்ந்தது ஆங்கிலப் புலமை. ஆங்கிலேய இலக்கியம் ஐநூறாண்டுக் காலத்து வளர்ந்த வேகம் பிசுக்கங்காய் வளர்ச்சி வேகம். அந்த வேகத்தில் ஆஸ்தான புலவர்களாய் இருந்த பெருமக்கள் வேட்ஸ்வேர்த், சதே, பை, வார்ட்டன், வைற்கெட், கிபர், யூஸ்டென், ரோவ், ரேற், ஷாட்வெல் முதலானவர்களாவர். அண்மையில் இருந்த ஆஸ்தான பெரும்புலவர் மேஸ்பீல்ட் என்பவராவர்.

ஞான மண்டலம்

## சிவயோக சமாஜ

## ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா

1 சிவயோக மார்க்கமே அநாதியான தத்துவ தரிசனம்
2 ஆசியாக் கண்டத்தின் பழையபெயர் ஜம்புதீவம்
3 வட அமெரிக்காவின் பழையபெயர் புஸ்கரதீவம்
4 தென்னமரிக்காவின் பழையபெயர் ட்ளாஸ்கதீவம்
5 அவுஸ்திரேலியாவின் பழைய பெயர் குசதீபம்
6 ஆபிரிக்காவின் பழைய பெயர் க்ரௌஞ்சதீபம்
7 பாரசீகத்தின் பழையபெயர் சகஸ்தானம்
8 பாபிலோனியாவின் பழைய பெயர் காந்தார தேசம்
9 எகிப்தின் பழைய பெயர் நீலதேசம்
10 சிவயோகத் துறவிகள் உலகமெங்கும் இருந்தார்கள்
11 சிவயோகத் துறவிகள் தாவரஉணவையே உண்டனர்
12 சிவயோகியரே தார்மீகநெறியை அறிந்தவர்கள்
13 விவசாயம், பாற்பண்ணை, வைத்தியம் பழைய துறைகள்
14 நான், எனது என்பன சுயநலப் போக்குகள்
15 ஆன்மவிடுதலை உலகசுகம் துறவிகளின் லட்சியம்.

## அருள்நெறித்திரட்டு

பெயருக்கேற்ப பெருமை வாய்ந்தசிறிய நூல் பெரியஇடத்திலிருந்து வெளிவந்துள்ளது. நாளும்நலத்தையே செய்து வரும் காரைநகர் தமிழ்வளர்ச்சிக்கழகம் அண்மையில் திரட்டி வெளியிட்ட செம்பாகமான இந்நூல் எல்லோரும் பெற்றுப் பயனடைதல் வேண்டும். இராமகிருஷ்ண பரமஹம்சரின் வழியில் வந்த திரட்டாயினும் திருமந்திரம், தேவாரம், சைவசித்தாந்தக் கோட்பாடு ஊடுருவ ஞானானந்த சுவாமிகள், சிற்பவானந்த அடிகள் முதலானோரின் அனுபவங்களும் ஆன்மஈடேற்றத்துக்கு வழித்துணைப் பேச்சாக நின்று கைகொடுக்கின்றன. இடையிடையே ஆங்கிலத்தில் விளக்கங்கள் விஞ்ஞானத்தொடர்பை விளக்குவனவாகும். வெளியிடுவோர் விலைகுறிக்கவில்லை. முப்பத்தாறு பக்கங்களில் பழுத்த அனுபவம். இடம் தமிழ்வளர்ச்சிக் கழகம், காரைநகர்.

## திவ்வியம் பழுத்த திருமுறைகள்

திவ்வியம் பழுத்த சைவ சித்தாந்தம் என்று குமரகுருபர சுவாமிகள் பாடியருளியவண்ணம், சைவசித்தாந்தம் பழுக்கக் காரணமாயிருந்தவை திருமுறைகள். திருமுறைகளில் சைவசித்தாந்தம் நிறைந்துள்ளது. திருமுறைகளால் தமிழிலக்கியம் பெருத்தது. தமிழரின் பண்கள் பரவி நிலவின. சைவத்திருக்கோயில் நாகரிகம் சிறந்தது. வழிபாட்டுமுறை மலர்ந்தது.

★ தீயவர்க்குச் செய்யும் உதவி நீர்மேல் எழுத்து ★



## சுப்பிரமணிய பாரதியார்

சாதியை அழிக்கும் சழக்கன்! அந்நாள்
ஆதிவருணு சிரமம் அழிக்க வந்தோன்
கவிஞன் என்று கழறவும் தகுதி
உண்டோ? என்று உரைத்தனர் அவரை
ஒதுக்கினர்; தள்ளினர் உறுமினர் பார்ப்பு
வயிற்றுச் சோற்றுக்கும் வழியில்லாமல்
அன்று பாரதி அணுவணுவாக
வறுமைப் பிணியில் வாடக் கண்டோம்.
கூற்று வடிவு கொண்ட உருவம்
மதம்பிடி பாரதி மன்னுயிர் தின்றது.
இறந்தாரன்றே! இறந்தாரன்றே!
இன்றே பாரதி எட்டய புரத்தில்
குன்றுயர் மண்டபம் நின்று சிரிக்கும்
தேசியக் கவிஞன் தீந்தமிழ்க் கவிஞன்
பாட்டுக்கொருவன் பாரதி புலவன்
பாரதி உலகப் பாவலன் தலைவன்
விடுதலைக் குழைத்த வீரத்திருமகன்
பெண்கள் அடிமை போக்கிட வந்த
கண்கள் தமிழ்மொழி கவிஞர் தந்தை
பாரதி விழா படைப்புப் பூசனை
நாட்டு மக்கள் வாயெல்லாம் புகழ்ச்சி
கேட்டுப் புளித்தது சீச்சீ வெட்கம்!
வறுமைத் தொட்டிலில் பசித்தாலாட்டு
வேதனை துக்கம் விழிப்புட னின்று
கவிதை பாடினன் கவிமணி பாரதி!

— தமிழரசன் சமூவை.

## கோபம் செய்த குழப்பம்

லியனடோ டாவின்சி என்னும் புகழ்பெற்ற ஓவியர் கிறிஸ்து நாதரின் இராப்போசன காட்சியை வரைந்துகொண்டிருந்தபோது, யாரோ ஒருவர் அவரிடம் வந்தார். வந்தவரின் போக்கினல் கோபங் கொண்ட ஓவியர் அவரைக் கடுமையாக வைது வெளியேற்றியபின், தம்வேலையில் ஈடுபட்டபோது அது உருப்படவில்லை. அவர் ஓடோடி அந்த மனித னிடம் மன்னிப்புக் கோரியபின் வந்து குந்தியதும் ஓவியம் உருவானது.

## நீதிசாரங்களான வாழ்க்கை அனுபவங்கள்

21 தானுகத் தேடிய தனம் உத்தமம். தந்தை தாய் வழிவந்தவை மத்திமம். சகோதரர் சொத்தை அனுபவித்தல் அதமம். மனைவியின் சீதனத்தை அனுபவித்தல் அதமத்திலும் அதமம்

22 தர்மவான்கள் மேகத்தைப்போலக் கொடுப்பவர் களாயிருத்தல்வேண்டும், தாருங்கள் என்று கைநீட்டுமுன் குறிப்பறிந்து கொடுத்தலே கொடை.

23 தனம் என்னும் பொருளுக்கு மூன்று நிலைகள் உண்டு. அவை தானம், அநுபவம், நாசம் என்பன. தானம் செய்யாமலும், அநுபவியாம லும் வைத்த பொருள் நாசமாகும்.

24 உபயோகமில்லாத மூவர் எவரெனில், கடன் வைத்துச் சென்ற தந்தை, ஒழுக்கம் இல்லாத தாய், படிப்பில்லாத மைந்தன்.

25 வெட்கம் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் அணிகலமானது. ஆனல் வெட்கத்தை விட வேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டு. பாடும் போது, பரதமாடும்போது, பசிக்கு உண்ணும் போது, போர் செய்யும்போது.


## மெய்கண்டான்

தமிழருக்கு அன்பு, அறம், அருள், தத்துவம் என் பன தனித்துவமானவை. தேவாரம், திருவாசகம், திருக் குறள், சித்தாந்தம் இத்துறைகளை நிரப்பியுள்ளன. இவை போதும். இவற்றைப் பாதுகாத்துக்கொண்டிருந்தாலே வாழ்வு சிறக்கும். மெய்கண்டார் என்னும் சைவப் பெருங்குரவர் திருநாமம் வீடுகள் தோறும் என்றும் நின்று ஒலிக்குமாறு செய்து, தமிழ்மரபைக் காத்தவர் இரத்தினசபாபதி. நாட்காட்டி, நாட்குறிப்பு முதலிய வற்றை நல்லமுறையில் தயாரித்துப் பெரியவர்கள் பல ரின் திருவுருவச் சாயல்கள் நிழல்களை நிலைக்கச் செய் தார் அவர். திருக்கோயிற்பணி, செந்தமிழ்ப்பணி, சைவப்பணி, கல்விப்பணி, சமூகப்பணி ஆகிய பன்முகப் பணிகளில் தம்பெயர் நிறுவித் தாம் மறைந்தவர் இரத் தினசபாபதி. இரத்தினசபாபதி மறைந்தாலும் அவர் பணிகள் ஒளிவீசியவண்ணம் நின்று நிலவும். தமிழர் செய்த தவக்குறைவு அவர் மறைவுக்குக் காரணம். அவர் பணிகளை அவரின் வழித்தோன்றல்கள் கட்டாய மாகத் தொடர்வார்கள். அவரின் ஆன்மசாந்திக்கு நாங் களும் பிரார்த்திக்கின்றேம். அவர் புகழ் வாழ்க.

## St. Francis and the Wood - Cutter

"Brother do not chop off the whole tree, but give it a chance to grow up again." And gave him the food for the day.

★ முடியுங்காலத்திலேதான் காரியம் முடியும் ★



# சிவநடனம்தான்

அசையாத சிவம் அசைவுபெற்றுச் சிவனாக நின்று அசைந்தாடாவிட்டால் அகிலமே அசையாது, காற்று வீசாது, மூச்சு வாங்காது, உலகமெங்கும் சடமாய் சவமாய் வெறிச்சோடிக் கிடக்கும். அவன் அசைவது ஆடல் வயத்தது. அவனாட்டத்துக்கு அண்ணாவியாய் நட்டுவாங்கம் செய்பவள் அவளாய சக்தி, சக்தியின்றேல் சிவனில்லை.

இத்தகைய கருத்துக்களையெல்லாம் சங்கநூற் புலவர்களும், திருமூலர் முதலான மெய்ஞ்ஞானிகளும், குமரகுருபரசுவாமிகளும் அவ்வப்போது பாடியருளிய திருப்பாடல்கள் நன்கு விளக்குவன. பாடல்களைப் படித்துக் கலைஞன் சிற்ப ஓவியங்களைப் படைத்தானா, ஓவிய சிற்பங்களைப் பார்த்துப் பெரியவர்கள் பாடியருளினார்களா என்று கேட்டால் இருவகையும் நடந்தேயிருக்கின்றன எனலாம்.

பென்னம் பெரிய தத்துவக் கருத்துக்களுக்கெல்லாம் கலைப்பொலிவு ததும்பிய சிற்பங்கள் சிலைகளை நம் தமிழ் நாட்டார் செய்தவற்றைப் பார்த்து மட்டிட முடியாத அளவு கலைப்புலமை வாய்ந்த மேற்கு நாட்டவர் சிலர் இவையாவும் கிரேக்க உரோம கலைகளிற் கடன்வாங்கியனவோ எனக் கருத்துத் தடைபெற்ற கண்ணோடு கண்டு இடர்ப்பட்டதும் உண்டு.

இவ்வாறாக சேர் முத்துக்குமாரசுவாமி அவர்களின் மூத்தான மைந்தன் மூதறிஞன் ஆனந்தக்குமாரசுவாமி இவற்றையெல்லாம் சைவ நூல்களின் விளக்கங்களோடு கண்டு உண்மையான கருத்தை வெளியிட்ட நூல்தான் உலகப்புகழ்பெற்ற சிவநடனம் என்னும் வெளியீடு. சிவநடனம் எனப் பெயர் பெற்றாலும் இந்நூலில் பதினான்கு கட்டுரைகள் உள்ளன. அவற்றில் ஆறும் கட்டுரையாக அமைந்ததே சிவநடனம் பற்றியது. இக் கட்டுரை நாயகமணிபோலமைய இதற்கு முற்பக்கத்தில் மனிதவினத்துக்குப் பாரத நாட்டின் பங்களிப்பு, இந்துக்களின் கலைக்கோட்பாடு, அழகுபற்றிய கொள்கை, அழகென்பதன் நிலை, பண்டைய பௌத்த வடிவங்கள் ஆகிய ஐந்தும் முன்னமைந்தவையாகும். இனிப் பின்னமைந்த ஆறும் இந்தியச் சிலைகள், இந்திய சங்கீதம், இந்தியரின் நிலை, சகசநெறி, அறிஞர் கூட்டம், நீட்சேயின் பரந்த நோக்கு, நவபாரதம், தன்னியல், தன்னாட்சி, தன்னறம் என்பனவாம்.

சிவநடனத்தில் கூறப்பெற்ற மூன்று கருத்துக்கள் முக்கியமானவை. பிரபஞ்சத்தில் நடப்பன யாவுக்கும் மூலகாரணமாயுள்ள இலக்கிய நடனம் திருவாசி. இறைவன் ஆடியருளும் ஞான நடனமாவது ஆன்மகோடிகளிலிருந்து மாயையை விளக்குவதைக் குறிப்பதாகும். சிவபெருமான் உவந்தாடும் தில்லைச் சிதம்பரமே உலகின் இருதய ஸ்தானம். எமது உடம்புக்கும் ஓர் இருதயம் உண்டு. அங்கேயும் இறைவன் ஆடியிருக்கின்றான் என்பதுமாகும்.

சிவநடனம் வெறும் கல்லல்ல உலோகமல்ல. அது கலை மாத்திரமல்ல, ஓவியம் சிற்பம் மாத்திரமல்ல. அது உள்ளார்ந்த சைவத்திறன், ஆனால் உலகுக்காய சமயத்திறன். இவற்றையெல்லாம் கருத்தூன்றிக் கற்ற மேற்குத்தேய விற்பன்னர்கள் வரிசையில் றோமெயின் றோலண்ட் அவர்களும், அல்டஸ் ஹக்ஸ்லி அவர்களும் கொடுத்துள்ள விளக்கங்கள் ஆழமானவை. அகலமானவை.

## பாட்டிலே கேள்வி

(பிறையணிவோன்)

1. ஆங்கிலத்தை ஒரு சிறிதும்
   அறியா இங்கிலாந்தரசன்
   பாங்காய் ஆண்டான் அந்நாட்டைப்
   பதின்மூன் றாண்டு மன்னன்யார்?

2. மூலச் சுவைகள் ஆறன்று
   மொழிந்தால் அவைகள் நான்கேயாம்
   காலம் நீதான் கடத்தாமல்
   கணக்காய்ச் சுவைகள் பேர்சொல்வாய்.

3. பெரிய யாக்கை பெற்ற யானை
   பிறந்த உடனே எவ்வெடைதான்
   இருக்கும் என்று தெரிந்திட்டால்
   இயம்பிருடனே செவியினிக்க.

4. கரன்சி நோட்டாம் பணத்தாளைக்
   கண்டுபிடித்து வெளியிட்ட
   பெருமை எந்த நாட்டிற்காம்
   பேசு வாயைத் திறந்துடனே.

1. முதலாம் ஜோர்ச் (1714 – 1727)
2. இனிப்பு, புளிப்பு, கசப்பு, உவர்ப்பு.
3. நாநூறு இறாத்தல்  4. சீனா.

## ஹலோ!

ரெலிபோனில் ஹலோ என்னும் சொல் அதிகமாக ஒலிக்கிறது. ரெலிபோன் 38 கோடி மேசைகளை அலங்கரிக்கின்றன. உலகில் அதிக ரெலிபோன்கள் உள்ள நாடுகள் அமெரிக்கா, யப்பான், பிரித்தானியா, மேற்கு ஜேமனி, றஷ்யா, இத்தாலி, பிரான்ஸ், கனடா, ஸ்பெயின், அவுஸ்திரேலியா என்பர்.

★ மேன்மக்கள் கெட்டாலும் மேன்மக்களே ★



## Good-Bye, Proud World

Good-bye, proud world! I am going home;
Thou art not my friend, and I am not thine;
Long through thy weary crowd I roam;
A river-ark on the ocean brine,
Long I've been tossed like the driven foam;
But now, proud world! I am going home.

Good-bye to flattery's fawning face;
To Grandeur with his wise grimace;
To uptart wealth's averted eye;
To supple office, low and high;
To crowded halls, to court and street;
To frozen hearts and hasting feet;
To those who go and those who come;
Good-bye, proud world! I am going home.

— Ralph Waldo Emerson

## கீரிமலை

யாழ்ப்பாணத்துக்கு அன்றும் இன்றும் பெருமை தரும் சுகத்தானம் கீரிமலை. நல்ல கடற்கரையில் நன்னீர் ஊற்றுள்ள கேணியில் நீராடுவதற்கும் அயலில் கிடைக்கும் அருமையான பதநீர் அருந்துவதற்கும் தென்னிலங்கையர் பெருவிருப்பத்தோடு வந்து சுகம் காணும் இடம் கீரிமலை.

பண்டைக்காலத்தில் நகுலமுனிவர் என்பவர் இங்கே தீர்த்தமாடி நன்மை பெற்றவர் என்பது கதை. நகுலம் என்பது கீரி. அம் முனிவருக்குக் கீரிமுகம் மாறியதாகக் கூறுவர். தொய்வு, முகவாதம் முதலிய நோய்கள் காரணமாக முகவிகாரம் உண்டாதல் இயல்பு. அத்தகைய ஏதோ நோய்கண்ட முனிவர் பூரணசுகமடைந்த இடம் அவர் பெயரால் கீரிமலை எனப் பெயர் பெற்றது.

கீரிமலையில் ஸ்ரீராமர், நளன், அருச்சுனன் முதலான இதிகாசகாலத்து மன்னர்கள் தீர்த்தமாடிப் போன இடம் கீரிமலை என்பது கர்ண பரம்பரைக் கதை.

## தத்துவப் பழமொழிகள்

1. ஆண்டவன் நினைத்தால் ஆகாதது இல்லை.
2. ஆட்டுக்கு வால் அளந்து வைத்தார்.
3. ஆசைதீர அனுபவித்தவர் இல்லை.
4. ஆண்டவன் உள்ளத்தை அளக்கமுடியாது.
5. ஆபத்தும் சம்பத்தும் யாருக்கும் உண்டு.
6. உள்ளத்துக்குள்ளே உலகம் அடங்கும்.
7. உள்ளது போகாது இல்லாதது வராது.
8. ஐந்து விரலும் ஒன்றுபோலில்லை.
9. ஓர் ஊருக்குப் பல வழிகள் உண்டு.
10. ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம்.
11. கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்.
12. தன் நிழல் தன்னைத் தொடரும்.
13. தன்னை அறியாதவன் தலைவனை அறியான்.
14. தீ இல்லாமல் புகையில்லை.
15. நதிமூலமும் ரிஷிமூலமும் அறியமுடியாது.
16. யமனை அறியாத உயிரில்லை.
17. மக்கள் குரலே மகேசன் குரல்.
18. மனம் அடங்கினால் வாயும் அடங்கும்.
19. வீட்டுக்கு வீடு வாசற்படி.
20. வாழ்வும் தாழ்வும் மன்னருக்கும் உண்டு.

## அவிழ்த்துப்பாருங்கள்

1. இரண்டு வீடுகளுக்கு ஒரு விட்டம்
2. உடலில்லா முண்டம் ஊரெங்கும் உண்டு
3. உலகத்துக்கு எல்லாம் ஒரேமூடி
4. ஊசிபோல் மரம், காசுபோல் இலை
5. எட்டாத கொப்பில் இனிப்புப் பொட்டலம்
6. உலர்ந்த கொப்பிலே மலர்ந்த பூ
7. ஏறாத மரத்தில் எண்ணூறு காய்
8. ஒரு பெரியவருக்கு இரண்டு தொப்பிகள்
9. உயர்ந்த மரத்தில் ஒரு இலையும் இல்லை
10. கட்டுப்பட்டவனை விட்டுப்பிரிந்தவள் குப்பையிலே
11. பூவாது காய்க்கும் மரம்
12. கையுண்டு விரல் இல்லை
13. கறுத்த பாறையில் வெளுத்த வேர்
14. கருங்காட்டிலே கட்டையர் ஊர்வலம்
15. காயும் பூவும் இலையும் கறிக்காகும்
16. காலில்லாமல் ஊரெல்லாம் போகிறான்
17. காலில்லாப் பந்தல் கண்ட இடமெல்லாம் உண்டு
18. சிவப்பிக்கு கால்பாகம் கறுப்பு
19. சிறுகத் தோன்றிப் பெருகி வளரும் சிங்காரி
20. சின்ன வீட்டில் கிண்ணம் தண்ணீர்

1 மூக்கு 2 பாம்பு 3 வானம் 4 கீரை 5 தேன் கூடு 6 குடை 7 குரக்கன்கதிர் 8 நிலக்கடலை 9 கற்றாழை 10 உமி 11 ஆல் 12 சட்டை 13 யானைத் தந்தம் 14 பேன் 15 முருங்கை 16 பாம்பு 17 வானம் 18 குன்றிமணி 19 ஆறு 20 இளநீர்

★ படிப்பின் அளவுக்கு அறிவு உயரும் ★



## கலை வளர்ச்சி

தமிழன் கண்ட கலைகள் பலவாக உள்ளன. முற்காலத்தில் ஒரு சில கருவிகளைக் கொண்டு பெருங் கலைகளைச் செய்தவன் தமிழன். அக்காலத்தில் எவரும் எக்கலையையும் செய்துவிடலாகாது. அவ்வக்கலையை அவரவர்தான் செய்யலாம் என்றொரு கட்டுப்பாடு இருந்தது. அது நாளடைவில் சாதிப்பிரிவாகவும் வழி வகுத்துவிட்டது.

இன்று எவரும் எக்கலையையும் செய்யலாம். கலைகள் செய்பவர்களிடையே ஏற்றத்தாழ்வு கிடையாது. இரும்பு வேலை, பொன் வேலை, மர வேலை, மண் வேலை, நெசவு வேலை, இசை வேலை என்பன சாதிப்பிரிவுகளைக் கடந்து எல்லோருடைய கைகளிலும் களிநடம் புரிகின்றன. கலைமாது எல்லோருக்கும் கடைக்கண் பார்வையால் கருணை புரிகின்ருள். இன்று கைத்திறன்மிக்க இளைஞர் அப்பளம் செய்தல் முதலாகக் கடின வேலைகளீருகச் செய்கிருர்கள். நம் இளைஞர்கள் பனையபிமானங் கொண்டிருப்பதைக் காணும்போது ஆனந்தக் கண்ணீர் வடிகிறது. வடபகுதிக்குப் பனைவளமே வாழ்வு என்பது முந்தையோர் கண்டுகொண்ட முடிபு.

நெசவுத்தொழில் மறுமலர்ச்சியடைவதற்குப் பொங்குங் காலம் மலர்கிறது. தமிழ்நாட்டுக் கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம் முதலிய இடங்கள் போல வட இலங்கையிலும் சில இடங்கள் வளரப் போகின்றன, இருந்துபாருங்கள். இறக்குமதிப் புடைவைதான் இடுப்புக்கு நல்லது என்று விடுப்புக்காரர் சொல்வதை இனி எங்கள் இளம்பெண்கள் நம்பமாட்டார்கள். உள்ளூர் வெள்ளைச் சேலையணிந்து அதுவும் வெண்மை துலங்க அணிந்து அரம்பையர் போற் காட்சியளித்த நங்கையர்களா இனிமேல் இறக்குமதியை நாடுவார்கள். பெண்குலத்தார்களுக்கு அபிமானம் வந்துள்ளது.

நல்லூர்த் திருவிழாவில் பனைப் பிரயோசனங்கள் பட்ட பாடு உங்களுக்குத் தெரியுமா? பனுட்டு, பாணிப் பனுட்டு, கல்லாக்காரம், ஒடியல், புழுக்கொடியல், ஒடியல் மா, புழுக்கொடியல் மா, பாணி ஜாம், கோடியல், குளிர்பானம், பாய், கடகம், பெட்டி, நீற்றுப் பெட்டி, சுளகு, மூடற்பெட்டி, உறி, திருகாணி, தடுக்கு எல்லாம் நல்ல விலை பெற்றன. சாதாரண பாய் பத்து ரூபா, வண்ணப்பாய் இன்னும் கொஞ்சம் கூட? சுளகு பத்து ரூபா என்ருல் பாருங்கள் பனைதரும் வாழ்வை.

நன்ருகப் படித்த இளைஞர்கள் தும்புத்தடி செய்கிருர்கள். காளான் வளர்க்கவும் கற்றுக் கற்பிக்கிருர்கள். சிற்றுண்டி வகைகள் செய்வதற்கு உள்ளூர் கிழங்குவகைகளை மூலப் பொருள்களாகக் கொண்டுள்ளார்கள். தூய்மை, துப்புரவு, சுவை, மலிவு இன்னும் உங்களுக்கு என்ன வேண்டும்.

இன்று உலாவரும் பாண் யாழ்ப்பாணத்தான் செய்தவை. என்ன சுவை, என்ன மலிவு, என்ன தூய்மை. ஒரு வாரத்துக்குப் பழுதுபடாமல் வைத்து உண்ணக் கூடிய பாண் தெற்கிலிருந்து எங்கள் தலைமுறையில் வந்ததே கிடையாது. கொஞ்சம் பொறுங்கள் ''ஹன்லி பாமேஸ்'' பின்னடையத்தக்க விசுக்கோத்து வரப் போகிறது.

கலைத்தெய்வமே! உனக்கொரு கும்பிடு. அம்மா ஒன்பது நாள்களிலும் உன்னை மூன்று வடிவங்களில் வீரத்தை வேண்டியும், செல்வத்தை வேண்டியும், அறிவை வேண்டியும் கொலுவிருத்தி வழிபடுவோம், எங்களைக் காத்தருள் புரிந்து ஆக்கபூர்வமாகவும் வாழ்வதற்கு வழிகாட்டுவாயாக. மலைமகளே! அலைமகளே! கலைமகளே! வணக்கம்! வணக்கம்! வணக்கம்!

## கொற்றவைநிலை

தொல்காப்பியம் என்னும் பழைய இலக்கண நூலில் கொற்றவை வழிபாடு கூறப்பெற்றுள்ளது, கொற்றவை பெண் தெய்வம். கொற்றவை வெற்றித்திரு, வெற்றியைத் தருபவள். அவளுக்குக் காளி, துர்க்கை, ஐயை என்றெல்லாம் பெயர்கள் உள்ளன. வீரத்தினுல் அடைந்த வெற்றியைக் கொண்டாடும் விழாவைத் துடிநிலை என்பர். வெற்றிக்குத் துணைசெய்த தெய்வத்தை வழிபடும் விழா கொற்றவை நிலை எனப்பெயர்பெற்றது.

---

சிறுவர்பகுதி

## தருமத்தை ஒருநாளும் மறத்தலாகாது

முற்காலத்தில் ஆபுத்திரன் என்னும் பசுபாலன் ஒருவன் இருந்தான். அவன் பசுக்களில் அதிக பற்றுள்ளவன். யாரேனும் பசுக்களுக்குத் தீங்கு செய்தால் அவர்களைத் தடுப்பான். ''புல்வெளிகளில் தானே சென்று மேய்த்து, எமக்கு இனிமையான தீம்பால் தருகின்ற பசுவோடு உனக்கு என்ன கோபம்?'' என்று அவன் பசுக்களைத் துன்புறுத்துவோரிடம் கேட்பான்.

பசுபாலன் பசித்து வந்தவர்களுக்கு இல்லை என்னுமல் உணவு கொடுப்பான். பகல் இரவு என்று பாராமல் எந்த நேரம் எவர் வந்தாலும், அவர்கள் மனங்கோணுமல் விருந்து கொடுப்பான்.

ஒரு சமயம் நாட்டில் கொடிய பஞ்சம் உண்டானது. அந்தப் பஞ்சத்திலும் பசுபாலன் தருமஞ்செய்வதை மறக்கவில்லை. ஒருநாள் அவனிடம் வந்தவருக்குக் கொடுப்பதற்கு அவனிடம் ஒன்றும் இருக்கவில்லை. அவன் வானத்தைப் பார்த்து இரண்டு கைகளையும் ஏந்தியபடி இறைவனை நினைத்து இரந்தான். அவன் கைகளில் அதிசயமான ஒரு பாத்திரம் நிறைய அன்னம் வந்து சேர்ந்தது. அது எடுக்க எடுக்கக் குறையாத பாத்திரம். அதற்கு அட்சய பாத்திரம் என்று பெயர்.

---

# தேவி வழிபாடு

தேவிவழிபாடு சக்தி வழிபாடு. சக்தி வழிபாட்டை அபிராமிபட்டர் ஆராமையோடு அபிராமி சமயம் என்பர். அது மிகவும் நல்லது என்றுகண்டு பிறரையும் ஆற்றுப்படுத்துவர். அம்பிகையான அபிராமியின் இன்னருள் பெற்ற அவர், அவளுடைய அருள்பெறவேண்டி ஏங்கி நிற்பவர்களுக்கு நல்ல வழிகாட்டுபவர்.

பகைவர் உபத்திரவம் தருதலாகாது. எந்தப் பொருளையும் இழத்தலாகாது; கவலை உண்டாகக்கூடாது. நல்ல சந்ததி உண்டாகித் தழைத்தல் வேண்டும். நல்லறிவு கிடைத்தல் வேண்டும். எண்ணியவை நிறைவேறவேண்டும். சகல நன்மைகளும் உண்டாதல் வேண்டும். துன்பங்கள் பாவங்கள் நீங்குதல் வேண்டும். அகாலமரணம், பஞ்சம், பிணி எவையும் உண்டாதலாகா. அம்பிகையின் பேரருளால் உண்மை ஞானம் உண்டாகி நற்கதி கிடைத்தல் வேண்டும்.

இவையாவும் கிடைப்பதற்கு அருள்வேண்டும். அருள் சக்தி. சக்தியின் வடிவம் தேவி. தேவியை வழிபடுவதால் சக்தி உண்டாகும். சக்தி உண்டானால் சித்தியுண்டாகும். சித்தியுண்டானால் வாழ்வு சிறக்கும். உலகங்கள் எல்லாவற்றுக்கும் இறைவியாயுள்ளவள் புவனேஸ்வரி: அவள் ஜகதாம்பிகை, பூரணி, புராதனி முதலான நூற்றுக் கணக்கான திருநாமங்கள் அவளின் நிறைவையும் பழைமையையும் குறிப்பிடுவன.

அம்பிகையின் அருள் வடிவங்களிலமைந்த உறுப்பு நலன்களை முன்னிட்டு அவளுக்குப் பல திருநாமங்கள் வழங்குகின்றன. அவளுடைய கூந்தல், தனம், மொழி, கண் முதலியன சொல்லமுடியாத அழகுள்ளவை.

அவளுக்குக் கூந்தலால் வந்த திருநாமங்கள் அல்லியங்கோதை, வண்டார் குழலி, வண்டார் பூங்குழலி, வண்டமர் பூங்குழலி, நறுங்குழல் நாயகி, மலர்க்குழல் நாயகி, ஞானப் பூங்கோதை, மட்டுவார் குழலி, திருக்குழல் நாயகி, மருவார்குழலி, கருந்தார் குழலி, சுரும்பார் குழலி, கோதையம்மை, முருகுவளர் கோதை, பூங்குழல் நாயகி, ஏலவார் குழலி, பூங்கோதை, புரிகுழல் உமை என்பனவும் இன்னும் பலவுமாம்.

அம்பிகையின் தனம் பெரிது. அவள் பெருவயிறள், பெருமோடி என அவளை வணங்கினார்கள். உலகிலுள்ள எல்லாவற்றையும் ஈன்றவள் அவள். அவளுடைய பெரிய முலையைப் பணைமுலை எனவும், குரும்பைமுலை எனவும் கூறுவர். அவள் உண்ணாமுலையம்மை, ஒப்பிலா முலையம்மை, பெருநன்முலைநாயகி, முற்றிலாமுலைநாயகி, வனமுலைநாயகி, அழகுமுலை நாயகி, இளமுலைநாயகி, கோடேந்துமுலைநாயகி.

அருள்வடிவான அம்மை அன்புமயமானவள், இனிய மொழியினள். அவள் கரும்பனையாள், கரும்படு சொல்லி, குயிலினும் இன்மொழியாள், குயில் மொழியாள், பண்மொழி நாயகி, யாழின் மொழியாள், யாழைப் பழித்தமொழியாள், யாழினுமென்மொழியாள், தேனார் மொழியாள், தேன்மொழிப்பாவை, பாலின் நன்மொழியாள், இன்மொழியாள், கனிவாய்மொழியம்மை.

அம்பிகையின் கண்ணழகு: அவளுக்குக் காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, அங்கையர்க்கண்ணி, வாள்நெடுங்கண்ணி, நீலாயதாட்சி, அஞ்சனாட்சி, காவியங்கண்ணி, வாளையங்கண்ணி, வேல்நெடுங்கண்ணி, தடங்கண்ணி, நீலமலர்க்கண்ணி, மலர்க்கண்ணம்மை, வேற்கண்ணம்மை முதலிய திருநாமங்கள் வழங்க வைத்தது.

இவ்வாறாக அவளுக்கு வழங்கும் திருநாமங்களை எங்கள் வாய்நிறைய வாசிக்கும்போது அவளுக்கு வணக்கமாகட்டும். வாசியுங்கள். மறுகால் வாசியுங்கள்.

## பூரண கும்பம்

எல்லாவிதமான சைவக்கிரியைகளிலும் பூரணகும்பம் இடம்பெறுகிறது. ஆலயங்களில் எல்லாவித அபிடேகங்களிலும் பூரண கும்பம் இடம்பெறுகிறது. பஞ்சபூதங்களின் வரனமுறையில் நீர் நான்காவது. பூமி நீரிலே தோன்றி நீரிலே அழியும். நீர் எம்மைச் சுத்திகரிக்கிறது. எம் உடைகளை, உறைவிடங்களை, பண்டங்களை, பாத்திரங்களைச் சுத்திகரிக்கிறது. நீர் எமக்கு உணவாகிறது, உணவைப் படைக்கிறது. நீரின்றி விளைவில்லை. வானத்திலிருந்து புனிதமாக ஒழுகும் நீர் நம்மை வாழ்விக்கின்றது. நீரின்றி உலகம் அமையாது. நாம் வாழமாட்டோம். நீரின் புனிதத்தன்மை தெய்வத்தன்மை கருதி அதிலே இறைவனை ஆவாகனம் செய்து வழிபடுவதே பூரணகும்பம் வைத்தலின் நோக்கம். அது மனநிறைவையும் குறிப்பதாகக் கொள்ளலாம். பசுவின் சாணியில் ஒருகைப்பிடியளவை உருட்டிவைத்து அதற்கு ஒரு அறுகம்புல்லைச் சாத்தின மாத்திரத்தே அது பிள்ளையாராகிவிடுகிறது. பிள்ளையார் அதிலே ஆவாசனமாகி அதிட்டித்து அருள்பாலிக்கின்றாரன்றோ. பூரண கும்பத்தில் இறைவன் எழுந்தருளுவதில் வேறொரு உட்கருத்தும் உண்டு. நமது உடம்பாகிய மனையகத்து உள்ளமே கோயிலாக இறைவன் எழுந்தருளுவன் என்பதையும் பூர்ண கும்பம் காட்டுகிறது. பூரண கும்பம் மங்கலங்களில் ஒன்றாய் உள்ளதோடு மங்கலத்தை உண்டாக்குவதுமாகும். எங்கும் அருவமாக உள்ள இறைவனுக்கு நீர் ஓர் உருவமுமாகும். செழுநீர்த்திரள் என்று அப்பர் அடிகள் அருமையாகப் போற்றுகின்றார் நீர்த்திரளை. பூரண கும்பம் நாளாந்த நற்கருமங்களை மலரச் செய்வதுபோலக் கும்பாபிஷேகம், யாகம், வேள்வி முதலிய திருக்கோயிற் கிரியைகளிலும் சிறப்பிடம் வகிக்கின்றது. இறைவன் வீதியுலா வரும் வேளைகளில் மண்டகப்படி, திருமணத் தம்பதிகளை ஆலத்தி சுழற்றி மங்கலகரமாக வாழ்த்துவதற்கு மனைகள்தோறும் நிறைகுடம் எல்லாம் பூரணகும்பத்தாலாவன. நாட்டின் மிகப்பெரியவர், ஞானியர், யோகியர் முதலானவர்களை வரவேற்கும்போது பூரணகும்பம் கொடுத்தல் சைவத்தமிழ் நாகரிகம். சாதாரண மண்டகப்படி, நிறைகுட வரவேற்பு முதலியவற்றில் ஏற்றிய நிறைகுடத்து நீரை மக்கள் மிதித்துச் செல்லும் வீதிகளிலும், தெருக்களிலும் ஊற்றிவிடுதல் வழக்கத்துக்குப் பொருத்தமாகாது. அந்நீரை எங்கேனும் கால் படாத இடத்தில் பெய்துவிடலாம்.

★ தீயார் தொடர்பு தீமையையே தரும் ★



# DIVINE LIFE FOR CHILDREN

Swami Sivananda

Pray before you start reading a book
Go to the temple every day
Give a coin to a blind man
Be pure in your thoughts
Wash the cloths of your parents
Study your daily lessons well
Be simple in your food and clothings
Simple living will make you happy
Be in company of good people
Be humble and simple always
Trust in God and do the right
Be slow to promise and quick to perform
God will bless an honest man
Keep your body pure, strong and healthy
Repeat always the names of God
Take pure vegetarian food
Keep your room very clean
Pure water gives you good health
Realise the value of time
Be punctual in attending any meeting
Your parents are visible gods for you
Service and sacrifice must be your motto
When you take a book for study. finish it.

## திவ்வியம் பழுத்த சைவசித்தாந்தம்
### அன்றட வாழ்வுக்கு அவசியமானது

சைவசித்தாந்தம் ஒன்றே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கையும் நல்ல முறையில் கூறுகிறது. நான்கும் நடைமுறையில் வேண்டியவை, இன்றியமையாதவை. சைவசித்தாந்தத்தைச் செந்நெறியாக்கியும், நன்னெறியாக்கியும் அமைத்தவை இந்த நான்குமேயாகும். இவற்றுள் சரியை, கிரியை, என்பன முன்னிலைகளாகும். அவற்றைத் தொட்டு உயிரையும் உயிர்க்குயிராய சிவப் பரம்பொருளையும் இணைப்பது யோகம். யோகத்தின் வழி ஞானம் கைகூட நான் அழிய இறையருள் கைகூடும்.

"நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழிய – வல்லதனல்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணு அரன்."

— திருக்களிற்றுப் படியார்.

## இலக்கிய கலாநிதி சாமுவல் ஜோன்சன்

ஆங்கிலப் புலவர்களுள் ஜோன்சன் பெரியவர். கலாநிதிப்பட்டம் பெற்றவர். ஜோர்ச் மன்னரால் பெரிதும் அபிமானிக்கப் பெற்று மாதப்படி வழங்கப்பெற்றவர். கோப்பிக்கடையில் கூடிய இலக்கியச் சந்திப்பில் எல்லோரையும் குதூகலிக்கச் செய்தவர். செம்மைவாய்ந்த இலக்கிய அகராதியொன்றைச் செய்து தந்தவர். புலவர் பெருமக்களின் வரலாற்று விபரங்களைச் சுவைபட எழுதியுதவியவர். (சுன்னுகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களை நாம் ஓரளவுக்குத் தமிழில் நினைத்து ஒப்பிட்டு மகிழலாம்.)

ஜோன்சனின் வரலாற்றை அவருடைய நண்பர் பொஸ்வெல் என்பார் விபரமாக எழுதியுள்ளார். ஏனைய சகபாடியரான புலவர்களும் பெரியவரைப்பற்றி எழுதியுள்ளார்கள்.

ஜோன்சன் இலக்கிய வளத்தில் நகைச்சுவை ததும்ப எழுதுபவர், பேசுபவர். சாதுரியம், சொல்லாற்றல் நிறைந்த சிருட்டிகளை உபகரித்தவர். கோப்பிக்கடைகளில் நண்பர்களுக்கு இலக்கிய விருந்தளித்து வந்த வித்தகர். பெருவிருந்துவேளைகளில் பேசியவை பேரிலக்கியங்களாகப் பெரிதும் மதிக்கப்பெற்றுள்ளன.

ஜோன்சனை உருவாக்கிய நிலையங்கள் பெம்புரோக், லண்டன் நூலகம் என்பனவாகும். சிரித்து, மகிழ்ந்து, மற்றவரையும் சிரிக்கச் செய்வதில் ஜோன்சன் பெரியவர். நன்றாகச் சிந்தித்துப் பேசிச் சிரித்து மகிழ்வதையே ஜோன்சன் விரும்பிச் சாதனை செய்து பெருவெற்றி கண்டார். அவருடைய பேச்சில் எழுத்தில் அமைந்த விறுவிறுப்பு இன்று வாசகர் வட்டங்களில் விளங்கிக் கொள்வது கடினம். அவர் தமது ஆங்கில இலக்கிய அகராதியில் கொடுத்த வரைவிலக்கணங்கள் கிண்டல்கள், குத்தல்கள், தாக்குதல்கள் சார்ந்தவையாயும் உள்ளன. அக்காலத்து அரசியல் வாணர்கள் ஆதரித்துவந்த பழைமை பேணும் கட்சி என்னும் ரோறிஸ், தாராண்மைக் கட்சி என்னும் விக்ஸ் ஆகியோர் பட்டபாட்டை வாசிக்க வாசிக்கச் சிரிப்புப் பீறிட்டுக் கொண்டுவரும்.

## காந்தியடிகள் கண்ட குரங்குப் பொம்மைகள்

காந்தியடிகளின் முன்னிலையில் இருந்த குரங்குப் பொம்மைகள் மூன்றில் ஒன்று கண்ணைப் பொத்தியவாறும், ஒன்று காதைப் பொத்தியவாறும், ஒன்று வாயைப் பொத்தியவாறும் உள்ளவை. பிறர் மனையைப் பார்க்கும்போது குருடனாகவும், பிறர் மறையை – இரகசியத்தைக் கேட்கும்போது செவிடனாகவும், கோள் சொல்வதில் ஊமையாகவும் இருக்கவேண்டும் என்பது நாலடியார் வெண்பா. நாலடியார் திருக்குறள் போன்றதொரு நீதிநூல். அதில் நானூறு பாடல்கள் உள்ளன. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த போப் நாலடியாரின் நீதிகளையும் வெள்ளையர் அறிய மொழிபெயர்த்தார்.

★ பெரியவர்கள் பகைவர்களை வணங்கார் ★



## திரு. வி. க. அவர்கள்

பன்மையில் ஒருமை கண்ட
　பாவலர்; தொழிலா ளர்தம்
நன்மைக்குப் பாடு பட்ட
　நாவலர் மெல்லி னத்தின்
முன்னிற்கும் வல்லி னம்போல்
　முன்னின்று தொண்டு செய்த
தென்தமிழ்ப் பெரியார்; தேன்போல்
　தித்திக்கும் எழுத்தின் தந்தை!

எல்லார்க்கும் மழைநீர்போல
　இருந்தவர்; பள்ளி சென்று
கல்லார்க்கும் கற்ற வர்க்கும்
　நல்லவர்; கேட்போர் காதைச்
சொல்லாலே இனிக்க வைத்த
　தூயவர்; பதர்சே ராத
நெல்போன்றார்; அமுதம் போன்றார்;
　நிலைபெற்ற வானம் போன்றார்!

— கவிஞர் சுரதா

## கடவுள் வழிபாடு

இந்த உலகத்தை உண்டாக்கியவன் இறைவன். அவனை அடைவதற்கு வழிவகுப்பதே சமயம். எனவே தான் சமயத்தை நெறி என்றும் வழங்குகின்றனர். இந்த உடம்பாகிய தனுவைத் தந்தருளியவரும் இறைவன். இது ஒரு கடவுட் கொடை. இறைவன் தந்தருளிய உலகத்தின் பரந்த பெயர் புவனம். நாம் உலக வாழ்வில் ஈடுபடுவதற்கு இறைவன் தந்தருளியவை கரணங்கள் போகங்கள்.

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம். எல்லோருக்கும் முத்தி நிச்சயம். சிலருக்கு முந்திக் கிடைக்கும், சிலருக்குப் பிந்திக் கிடைக்கும்.

(Men must endure their going hence, even as their coming here.)

இன்று மக்கள் யுகம். மக்கள் ஆணையாலேயே அரசாங்கம் நடைபெறுகிறது. மக்களிடம் பெற்ற அதிகார வலு காரணமாகவே ஆட்சியாளர் ஆளுகின்றார்கள்; அரசாங்கத்தின் ஆயுட்காலம் முடிந்தபின் அரசாள்வோர் மக்களிடமே மீண்டும் போவார்கள். மக்களிடமே ஆளும் உரிமையையும் இறைமையையும் ஆளும் கட்சியினர் பெறுவார்கள்.

நாமும் எங்கிருந்து இங்கே வந்தோமோ அங்கேயே மீளப் போகப்போகிறோம். ஆங்கிலத்தில் றிலிஜன் (Religion) என்னும் சொல்லின் கிரேக்கர் கருத்தும் அதுவேயாகும்.

தனக்குவமையில்லாதான் தாள்சேர்தல் நமது குறிக்கோள். அதுவே நெறி. அதுவே எங்கள் சமயம்.

A government always tries to please the people to get a mandate. It goes to the people again to get a fresh mandate. We worship God to get some freshness.

எங்கள் உடல் வாடி வதங்கிக் களைப்புற்றிருக்கும் போது நாம் குளிர்நிழலிலே இளைப்பாறுகிறோம். எங்கள் உள்ளம் வாடி, நாம் கவலையுற்றிருக்கும்போது அமைதி, சாந்தி பெறுவதற்கு அருமையானசோலை எங்கள் சமய நூல்களின் தொகுதியேயாம்.

சமயங்கள் பலவாக இருக்கலாம். சமயாசாரியர்கள் பலராயிருக்கலாம். அவர்கள் பலவிதமாகக் கூறியிருக்கலாம். அவற்றுள் உண்மைப் பொருளை ஆராய்ந்து அறிதலே அறிவு.

To discern the truth in everything from whomsoever it may be heard is wisdom.

எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு.

To live in conformity with the world is wisdom
Peaceful co-existence is the new way of life.

Let us live that and leave world to reach our destination of everlasting bliss.

## அந்த எருது

திருக்கோயிலிலே இறைவனுக்கு முன் அடக்க ஒடுக்கமாகப் படுத்திருக்கும் மாடு, எருது, நந்தி என்றே பெயர் பெறுகின்றது. நந்தி பக்குவான்மா. அது பந்தபாசங்கள் பற்றுக்களை எல்லாம் பலிபீடத்திலே கழற்றிவிட்டுப் பரிசுத்தமாகப் படுத்திருக்கிறது; அது ஆனந்த பரவசநிலை.

கொடியேற்றத்திலும் சிவன்கோயிலில் கொடிமரத்தில் ஏறும் கொடிச்சீலையில் எருது சிறப்பெற்றுள்ளது. விமானம், கோபுரம், மதில் எங்கும் எருது பக்குவமாகக் கால்களை மடித்துச் சிவனே என்று படுத்திருக்கிறது.

இறைவனின் திருவிழா நாள்களில் இடபம் வாகனம். அவர் கடகரி, பரிமா, தேர் யாவும் ஏறிவந்தபின் தேரடி பார்க்க எழுந்தருளும்போது திருமாலாய இடபத்திலேயே ஏறிவருகிறார். மாடு நமக்கு வழிகாட்டுகிறது. வாழவைக்கும்.

★ இளமையில் வறுமை எதிலும் கொடிது ★



# பரிசுத்த போப் ஆண்டவர் ஜோன் போல் II

## அளித்த பெரும்பட்டம்

## "பேப்பல் நைற்"

பெரிய பட்டம் பெறுபவர்
தமிழ் நாட்டுப் பெருவர்த்தகர்

செவலியர்

# T. R. பின்கீரே அவர்கள்

சென்னைமாநகர் மக்கள் அபிமானத்தோடு
எடுக்கும் பாராட்டு விழாவில்
'மில்க்வைற்' தொழிலகமும்
சேர்ந்துகொள்கிறது.

றெக்ஸ் வர்த்தக நிறுவனம் மூலம்
வணக்கத்துக்குரிய பெரியார்

பரவலாகச் செய்துவந்த, வருகின்ற, வரப்போகும்
காலத்துப்பணி என்றும் நிலவும் என்பது
எங்கள் இதய ஒலி.

வாழ்க பெரியார், வளர்க இவர்தம் பணி,

★ மில்க்வைற் தொழிலதிபர்

---

## வித்தியாரம்பம்

விஜயதசமி நாள்வரை காத்திராமல் உங்கள் பிள்ளைகளுக்குத் தேவையான ஏடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முந்துங்கள். ஏடுகள் இலவசம். தூரத்தில் உள்ளவர்கள் போதிய தபால் முத்திரைகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும். மில்க்வைற் தபாற்பெட்டி 77, யாழ்ப்பாணம்.

## அமோக ஆதரவுக்கு நன்றி!

நல்லூர்த் திருவிழாக் காலத்தில் கோயில் முன்புறத்தில் மில்க்வைற் தற்காலிகமாக நடத்திய விற்பனைப் பகுதியில் அமோக ஆதரவளித்த அன்பர்களுக்கு நன்றி! பொறுமையோடு பலவித மேலுறைகளைச் சேகரித்து நல்ல பரிசுப் பொருள்களைப் பெற்றவர்களுக்கு எங்கள் பாராட்டு. இன்னும் பலவிதமான பரிசுகள் உண்டு. மேலுறைகளைச் சேகரியுங்கள்.

---

நல்லவர் ஒருவரால் எல்லார்க்கும் நன்மை

## நிறைந்த சுகத்துக்கு அமைந்த உணவு

"பேனுட் யென்சன்"

நீங்கள் நீங்களாயிருத்தல் உங்கள் உணவேயாகும். உங்கள் தேகசுகம், உங்கள் கனிந்த பார்வை, உங்கள் நீடித்த வாழ்க்கை யாவும் நீங்கள் உண்ணும் உணவால் அமைவன. நீங்கள் உண்பன சுவையாயிருக்கலாம், அழகாயிருக்கலாம். ஆனல் அமையவேண்டியவை அமையாவிட்டால் அவற்ருல் ஆவன ஒன்றுமில்லை. எனவே தேவையறிந்து உண்ணப் பழகிக்கொள்ளவேண்டியது உங்கள் தலையாய கடமையாகும்.

நூற்றுக்கணக்கான நிபுணர்கள் மத்தியில் பதினெரு ஆண்டுகள் ஆராய்ந்து தொகுத்த பட்டியலை வைத்திய கலாநிதி தயாரித்துள்ளார். மனித சமுதாய நன்மைக்காக முப்பத்தைந்து ஆண்டுகள் கட்டுரைகள் எழுதிய கலாநிதி யென்சன் ஐரோப்பா, ஆசியா, மெக்சிக்கோ, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா முதலாய நாடுகளில் பயிற்சி பரிசோதனைகள் நடத்திக் கண்டவை, பயனுள்ளவையெனக் கண்டபின் 366 பக்கங்களில் ஆங்கிலத்தில் வெளியிட்டு அகிலத்துக்குப் பயன் தரும் வகையில் தந்துள்ளார். இவ்வரிய மரக்கறியுணவே மகத்தானவையெனக் கூறும் மகிமை கண்டு தாமே வீட்டில் அநுபவித்தபின் எல்லோருக்கும் பயன்தரும் வழியில் எழுதுமாறு றேயல் டிஸ்பென்சரியார் எம்மிடம் தந்தார். மொழிபெயர்த்து உங்களுக்குத் தருகிறேம். ஏற்பதும் புறக்கணிப்பதும் உங்களைப் பொறுத்தது. உயிரும் ஊட்டமும் உடம்பும் தருவது உணவு, ஊட்டமில்லாமல் உடம்பும், உடம்பில்லாமல் உயிர்ப்பும் இல்லை. வடஇந்தியாவில் சீக்கியர் ஹன்சாஸ் மக்கள் நோயின்றி வாழ்கின்றனர். சத்துணவு சமவுணவு கொண்டு அழகும் ஆரோக்கியமும் பெற்று வாழ்கின்றனர்.

கலாநிதி கரிசன் 1200 எலிகளுக்கு சீக்கியர் உணவூட்டி வளர்த்தபோது ஓர் எலியாவது நோயுறவில்லை. மனித உடம்பின் வளர்ச்சிக்கு உலோகவகைகள் உப்புவகைகள் எனவுள்ள கல்சியம், சிலிக்கன், சோடியம், அயடின், மக்னீசியம் முதலியன தேவை. இவையாவும் தாவரவுணவிலே தலைசிறந்துள்ளன. இவை மனிதரின் இரத்தத்துக்கு வளம் கொடுப்பவை. தாவரவுலகில் உலோக உப்புச் சத்துக்கள் பசளையாகி வளங்கொடுக்குந் தன்மையில் இவை உடம்புக்கும் வளம் கொடுப்பதில் இன்றியமையாதனவாகின்றன. நல்ல இரத்தம் உள்ளவரின் உள்ளுறுப்புக்கள் நல்லமுறையில் இரத்த மூட்டப் பெறுவதால் பூரண தேகசுகம் உண்டாதல் இயல்பு. உடம்பின் உள்ளுறுப்புக்கள் யாவும் பூமியில் உண்டாகும் உணவினுல் உறுதிபெறுகின்றன. இவை தாவரவுணவேயன்றி வேறெவையுமல்ல.

## பந்துகள் பரிசு

பனம் விதைகள் இரண்டாயிரம் தரக்கூடிய விளையாட்டுக் கழகங்களுக்கு புட்போல் அல்லது வொலிபோல் ஒன்று பரிசாகத் தருவதற்கு மில்க்வைற் தொழிலதிபர் ஆயத்தம்.

## கன்னித் திங்கள்

இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன் தனியார் பாடசாலைகள் சைவமும் தமிழும் கற்பித்த காலத்தில் ஆசிரியர்கள் பெரும்பாலானேர் ஆசார சீலராய் இருந்தனர். தினமும் நீராடித் தோய்த்துலர்ந்த உடைகள் அணிந்து நித்திய கருமம் என்னும் பெயரில் நிலவிய சந்தியாவந்தனம் செய்து, பாடசாலைகளில் அறிவுப் பெட்டகங்களாய் அடக்கமாயிருந்தனர். அக்காலத்தில் புரட்டாதி மாதத்து நவராத்திரி நாள்கள் பெரு விழாக்காலம். பாடசாலைகள் தோறும் கொலுவைத்துப் பிள்ளைகளின் புத்தகங்கள் யாவும் அம்பிகைக்கு முன் ஒழுங்காக வைக்கப்பெறும்.

பாடசாலை வளர்ச்சிக்கு ஊரவர் அத்தனைபேரும் உபகரித்தல்வேண்டும் என்று கருதிப் பிள்ளைகளை வீடுவீடாக அழைத்துச் சென்று விருத்தம் பாடிப் பெரியவர்களை மகிழ்வித்துப் பரிசும் பாராட்டுப் பொருள்களும் பெறுவர். அரிசி, நெல், தானியங்கள், தேங்காய், பழங்கள், புடைவைகள் நிறையக் கொடுப்பர்.

பிள்ளைகள் பக்திப்பாடல்கள் பாடுவதோடு, அபிநயம், கும்மி, கோலாட்டம், காவடியாட்டம், கரகம் முதலியனவும் இசையோடு பயின்று அரங்கேற்றி மகிழ்விப்பர். அவர்கள் வழக்கமாகப் பாடும் பாடல் ஒன்று சாதாரணமானது; விருத்தம் பாடுதல் என வழங்கியது.

"கன்னித் திங்கள் வருகிற தம்மா
கருத்துடன் நவராத் திரிக்குக்
கன்னிகை யம்மன் பூசைகள் செய்யக்
காசு பணம் வேண்டும்
பொன்னைப் போல நிறமுள்ள கனியும்
பூமடை காய்மடை யும்
புனிதா யப்பம் இளநீர் புஷ்பம்
புனுகு சவ் வாதுடனே
வன்னப் பள்ளியிற் படிக்கும் பிள்ளைகள்
மாதா மனை தோறும்
வாங்கும் பணமும் அரிசியும் கொண்டு
வந்திடு பூசைக்கு
அன்னப் பரிமள குங்குமம் அகில்கமழ்
அழகிய மெய்யாளே
அம்பிகை கச்சிக் காமக் கோட்டத்
தபிராமித் தாயே!"

## மரம் நடுவோம்

தாமரைத்தீவான்


மரம் மனை மரத்துக் காகும்!
மழை முகில் ஈர்ப்புக் காகும்!
மரம் எரி விறகுக் காகும்!
மனிதரின் இருப்புக் காகும்!
மரம் விலங் குணவிற் காகும்!
மானில அழகிற் காகும்!
மரம் பயிர் உரத்திற் காகும்!
மரம்நடு வோமே நாமே.

★ உணவுக்காகவே எல்லோரும் உழல்கின்ருர்கள் ★

## அமரர் பொன் சிவலிங்கம்



அமரர் பொன் சிவலிங்கம் அவர்கள் சூராவத்தையைச் சேர்ந்த பொன்னையா சின்னம்மா தம்பதிகளின் மைந்தர். இவர் 25-3-1920 ஆம் நாளில் தோன்றி அறுபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்து சென்ற மாதம் அமரரானவர். மயிலணியிலும் மல்லாகத்திலும் கல்விகற்ற இவர் பதினெட்டாம் ஆண்டுப் பராயத்திலேயே தென்னிலங்கையில் தெகியோவத்தை றப்பர்த் தோட்டத்தில் எழுதுவினைஞராகப் பதவிபெற்று இருபத்தேழு வருடங்கள் பணிபுரிந்தவர். பின்னர் 1965 முதல் 1974 வரை வேறொரு தோட்டத்தில் பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றியவர். இவர் ஏழாலை தெற்கு விளிசிட்டியைச் சேர்ந்த குட்டித்தம்பி தையல்நாயகி என்பாரைத் திருமணம் செய்து மைந்தர் நால்வரையும், பெண்கள் இருவரையும் பெற்று அவர்களை நன்னிலையில் வாழவைத்து மகிழ்ந்தவர். அண்மையில் மில்க்வைற் தொழிலகத்தில் கடமையாற்றி மறைந்தவர். மில்க்வைற் தொழிலகத்தில் ஆங்கிலத் தட்டெழுத்துப் பொறிவேலையை நன்றாகச் செய்ததோடு மொழிபெயர்ப்பு வேலைகளையும் வேண்டும்போது செய்தவர். இவரின் இடத்தை நிரப்பிக்கொள்ளுதல் கடினம். இவர் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.



## கிரகங்களே! வாருங்கள்!

கிரகங்களே! வாருங்கள்! நீங்கள் முன்னர் காந்தி மகான் தோன்றிய வேளையில் கூடிநின்ற அமைப்பில் இன்னும் ஒருமுறை கூடிநிற்பீர்களா? எமக்கு மாத்திரமல்ல முழு உலகத்துக்கும் ஒரு காந்தி அவசரம் வேண்டும். அவர் முன்னர் ஒக்டோபர் இரண்டாம் நாளில் தோன்றிய ஹரஞ்சந் மோஹனதாஸ் காந்தியேயாதல் வேண்டும். காந்தி உருவாக நீங்கள் ஒழுங்காக நிற்பீர்களா?

## உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு

தமிழ் இலக்கிய நூல்களும் சைவ சமய நூல்களும் உலக நலன் கருதி வாழ்த்தும் தனிப்பெருமை வாய்ந்தவை. அவை உலகந் தழுவியவை. உலகெலாம் என்று மங்கலகரமாக ஒலிப்பவை. அந்தவகையில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி, அனைத்துலக சைவநெறி மாநாடுகள் நடைபெற்ற வைபவங்களை நாம் அனுபவமாக அறிந்துள்ளோம்.

இந்தவரிசையில் உலகத் தமிழ்ப்பண்பாட்டு மாநாடு ஒன்று தமது மூன்றும் பெருவிழாவைத் தமிழ்நாட்டுச் சேலம் என்னும் சிறந்த பிரதேசத்தில் வருகிற டிசெம்பர் மாதம் 13, 14, 15ஆம் நாள்களான வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறப்போகிறது. இடம் விசயராகவாச்சாரி நூலக மண்டபம். விபரம் சோலை இருசன் 34, செயித் குடியிருப்பு, குமாரசாமிப்பட்டி, சேலம் 636007 தமிழ்நாடு.

## குளம்தோண்டும் பணி இன்னும் தீவிரமாதல்வேண்டும்

மில்க்வைற், குளம் தோண்டும் பணிக்கு இரவல் கொடுப்பதற்கு மேலும் மண்வெட்டிகள், தாச்சிச் சட்டிகள் வந்து குவிந்துள்ளன. குளந்தோண்ட விரும்பும் தொண்டர்கள், சங்கங்கள், சபைகள்மூலம் என்றும் விண்ணப்பித்து எடுத்துப் பயன்படுத்தலாம்.

## வல்லிபுரத் திருவிழா

வல்லிபுரத்துப் பெருமாள் ஆலயத் தேரிலன்று மில்க்வைற் அன்பர்கள், அடியார்களுக்கு வீட்டுத்தோட்ட விதைகள், மரக்கன்றுகள் இலவசமாக வழங்கியதை ஆலய நிர்வாகிகள் பாராட்டினார்கள்.

## குடியேற்றப்பகுதிகளில் பனையபிவிருத்தி பரவலாதல்வேண்டும்

மில்க்வைற் பனையபிவிருத்திப்பகுதி பல்லாயிரம் விதைகள் சேகரித்துள்ளது. திட்டமிட்டு நாட்ட விரும்புவோர் விண்ணப்பித்தால் குடியேற்றங்களுக்குக் கொண்டுவந்து தருவோம்.

## மானிப்பாயில் மரங்கள், கன்றுகள் உபகரிப்பு

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவாளர், மெமோறியல் கல்லூரியில் நடத்திய கருத்தரங்கில் பங்குபற்றிய மில்க்வைற் தொழிலதிபர், நிழல்மரக் கன்றுகள், பழமரக் கன்றுகள் வீட்டுத்தோட்டப் பயிர் விதைகள் எல்லோருக்கும் இலவசமாக வழங்கினார்.

★ உலோபியர் தடியடிக்கு அஞ்சி ஈவார்கள் ★

## 'நவராத்திரி நாயகி........

1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் கண்ட சிந்தனை இந்திய சிந்தனை எனக்கூறினும் அமையும், புல்வெளிகளினூடாகவும் வனந்தரங்களினூடாகவும் வந்து இந்தியாவில் குடியேறிய வேறு புலத்தார் வரும்பொழுது ஒன்றும் கொண்டுவரவில்லை. அவர்கள் வந்து குடியேறிய பின்னரே மிகப்பழைய வேதவொலியை எழுப்பினர். வேதம் முதல்நூல் எனக்கொள்வதில் தவறில்லை. வேதம் இயற்கையை நல்லமுறையில் எடுத்திசைப்பது. இயற்கையினூடாகத் தெய்வத்தன்மையை அன்றுமுதல் இன்றுவரை எல்லோரும் காண்கின்றனர். இயற்கையில் தாவரங்கள் கண்காணக்கூடியதாக முதலிடம் வகிக்கின்றன. பெருமரங்களின் நிழலில் அமைதியும் ஆனந்தமும் கண்டவர்கள் அம்மரங்கள் பட்டுப் போனபின்னரும் அவற்றின் அடிப்பாகத்தில் இறைமையைக் கண்டனர். பெருமரங்களைச் சுற்றிக் கொடிகள் தாவிப் படர்வதைக் கண்டவர்கள். ஆன்மாக்களாய உயிர்களும் தாவிப்படரவேண்டிய ஒரு முதல்வன் இறைவனே என உணர்ந்தனர். கோயில்கள் எழும்புவதற்கு முன் வாழ்வும் வளமும் வாழ்விடமும் வழங்கியவை மரங்களே. மரங்களைப் பாதுகாத்தல் ஒரு விழா. மரங்கள் இல்லா இடங்களில் அவற்றை நாட்டுதல் ஒருவிழா. கோயில்கள் எழுந்தபின்னரும் கோயில்களுக்குரிய தனிச் சொத்து தலவிருட்சம் என்னும் ஒரு மரம். திருவிழாவின் ஆரம்பத்துக்குக் கொடியேற்றுவதற்கு நிலைக்களனாய் நிமிர்ந்து ஓங்கிநிற்பது கொடிமரம். குழந்தைகள் பிறந்ததும் தொட்டிலில் இடுவதற்குக் கைகொடுப்பது மரம். கிழவனூர் இறந்ததும் கிடத்த உதவுவது மரம். வாழ்விலும் தாழ்விலும் கைகொடுப்பது மரம். உணவாயும் மருந்தாயும், உடையாயும் உறைவிடமாயும் நின்றுதவுவது மரம். எந்த மரமும் கற்பகதரு. எந்தச் செடியும் அதியற்புத மூலிகை. முளைக்கும்போதே பயன்தரும் அறுகு, துளசி முதலியனவும் மரம். முளைத்தபின் பூவாகிப் பயன்தருவனவும், காயாகிப் பயன்தருவனவும், பழமாகி, விதையாகி, பட்டையாகி, பிசினுகி வேராகி, சருகாகிப் பயன்தருவனவும் மரம். மரமில்லாமல் வாழ்வில்லை, மரமில்லாமல் வழிபாடில்லை, மரமில்லாமல் விழாவில்லை, மரமிருந்தால் எல்லாமுண்டு. உங்களுக்கு மனமிருந்தால் மரம்நாட்டுவதை நாடு நகரமெங்கும் பெருவிழாவாகக் கொண்டாடுங்கள். உங்களுக்கு விதை வேண்டுமா? நாற்றுமேடையில் தயாரான கன்றுகள் வேண்டுமா? செடி கொடிகளின் நறுக்குகள் வேண்டுமா? என்ன வேண்டும்? மரம் நாட்ட ஆயத்தமானுல் நவராத்திரி நாள்கள் வரை காத்திராமல் உடனே புறப்படுங்கள். உங்கள் தேவைகளை நிறைவேற்ற மில்க்வைற் நாற்றுமேடைகள் சேவை செய்கின்றன. எல்லாம் இலவசம். எவர்க்கும் இலவசம். என்றும் இலவசம். நல்லதைச் செய்வதே நாட்டுக்கேற்ற பெருவிழா. உங்கள் கையால் ஒருமரம் நாட்டினுலும் அது ஒரு விழா. மரம் நாட்டுதல் தமிழர் பழக்கம், அது தமிழர் வழக்கம், தமிழ்ப் பாரம்பரியம்.


நீலந்தோய்க்கும் வேலைச்சிரமம் வேண்டாம்!

உங்கள் சீருடைகள்
மிகுந்த வெண்மையடையச்
சிறந்த வழி, சிரமமில்லாத - சிக்கனமான வழி,
ஒன்றே ஒன்றுதான். அது

**மில்க்வைற் நீல சோப்**

சம்பூரண சலவைக்காக உபயோகித்தலாம்.

பளிச்சிடும் வெண்மைக்குப் பாவியுங்கள்
மில்க்வைற் நீலங்கலந்த நீலக்கட்டிகளை




ஒரு கட்டியின் விலை ரூபா 2/-

நீலசோப் மேலுறைகளில் அச்சிட்டிருக்கும்
திருக்குறள் 50 ஐ கத்தரித்து கொடுத்து
1 அப்பியாசக் கொப்பி அல்லது 10 ஐ கொடுத்து
1 அழகிய ஸ்ரிக்கரை இனமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.


## இங்கிலாந்தின் சைவ முன்னேற்றச் சங்கம் எட்டாம் ஆண்டு நிறைவு விழா

வாரம்தோறும் லண்டனில் சைவம் பரப்பும் இச்சங்கம் குருபூசைகள், பண்டிகைகள் முதலிய தினங்களைப் பக்தியோடு கொண்டாட வழிசெய்து நிலவிவருகிறது. இச்சங்கம் தொடங்கிய நாள்முதல் அங்கே ஆக்கபூர்வமாகச் செய்துவருகின்ற பணிகள் உலகமறிந்தவையாகும். வைத்திய கலாநிதிகள், பொறியியல் நிபுணர்கள், கணக்காய்வாளர் முதலான பலதுறைப்பட்ட நிபுணர்கள் பலர் கூடிப் பக்தியின் பாலராகிப் பரமனுக்காட்பட்டுச் செய்யும் பணியை ஐரோப்பியர்கள் பாராட்டுகிருர்கள். நாமும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப்புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர் : திரு. க. சி. குலரத்தினம் 1-10-85.